# தமிழச்சி தங்கபாண்டியன்

தென்சென்னை நாடாளுமன்ற உறுப்பினர்


**நாள் : 13.03.2023**

## பீடி சுற்றும் தொழிலில் குழந்தைத் தொழிலாளர் முறையைத் தடுக்க மாநில அரசுகளுக்கு அறிவுரை?

## திமுக எம்பி தமிழச்சி தங்கபாண்டியன் ஒன்றிய அரசுக்கு கேள்வி

**இது தொடர்பாக கடந்த திங்கள்கிழமை அவர் எழுப்பிய கேள்வி விவரம் வருமாறு:**

பீடி தயாரிக்கும் தொழிலகங்களில் 18 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களைப் பணியில் அமர்த்துவதைத் தடுக்க மாநில அரசுகளுக்கு ஒன்றிய அரசு அறிவுரை ஏதும் கூறியுள்ளதா?

1986 ஆம் ஆண்டின் குழந்தைத் தொழிலாளர்கள் தடுப்பு ஒழுங்குமுறைச் சட்டம் மற்றும் சிறுவர்கள் நீதிமுறைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தனியார் தொழிலகங்களில் 18 வயதுக்குட்பட்ட சிறுவர்கள் பணியில் அமர்த்தப்படுவதைத் தடைசெய்ய ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை விவரங்களைத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளத் தவறினால் அதைப்பற்றிய விவரங்களையும் அதற்கான காரணங்களையும் தெரிவிக்க வேண்டும்.

பீடி சுற்றும் தொழில் அபாயகரமானது என அறிவிக்க ஒன்றிய அரசு உத்தேசித்துள்ளதா? அவ்வாறு உத்தேசித்திருந்தால் அதைப் பற்றிய விவரங்களையும் தெரிவிக்க வேண்டும்.

பீடி சுற்றும் தொழிலாளர்களுக்கு அதிக ஊதியம் கிடைக்கும் வேறு வேலை வாய்ப்புகளை உருவாக்க புதிய உத்தேசத் திட்டம் ஏதும் ஒன்றிய அரசின் பரிசீலனையில் உள்ளதா?

பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு புகையினால் வரும் உடல்நலப் பாதிப்பில் இருந்து பாதுகாத்துக் கொள்ளவும் சமுதாயத்தில் கண்ணியத்துடன் வாழவும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்திக் கொள்ளவும் தேவையான திட்டங்களைச் செயல்படுத்த ஒன்றிய அரசு செயல் திட்டங்கள் ஏதும் மேற்கொண்டுள்ளதா? அவ்வாறு மேற்கொண்டிருந்தால் அது தொடர்பான விவரங்களையும் தெரிவிக்க வேண்டும் என்று திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் கோரினார்.

**உறுப்பினர் தமிழச்சி தங்கபாண்டியன் எழுப்பிய கேள்விக்கு ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை இணை அமைச்சர் ராமேஷ்வர் டெலி அளித்த பதில் விவரம்:**

பீடி சுற்றும் தொழில் உள்ளிட்ட அபாயகரமான தொழிற்கூடங்களில் 14 வயதுக்குட்பட்ட சிறுவர்களையும் 14 முதல் 18 வயதுக்கு உட்பட்ட இளைஞர்களையும் பணியில் அமர்த்த தடை செய்ய வகை செய்யும் சட்டம் நடைமுறையில் உள்ளது. கடந்த 1986 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் சிறுவர் தொழிலாளர் முறைத் தடுப்பு மற்றும் ஒழுங்குபடுத்தும் சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தில் கடந்த 2016 ஆம் ஆண்டு தேவையான திருத்தம் செய்யப்பட்டது.

கடந்த 1988 ஆம் ஆண்டு குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் சிறுவர்கள் பணியமர்த்துப்படுவதைத் தடுக்கவும் ஒழுங்குபடுத்தவும் புதிய சட்டத்தை ஒன்றிய அரசு இயற்றியது. இச்சட்டத்தின் கீழ் மாவட்ட அளவில் மேற்பார்வை அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். மேலும் இச்சட்டத்தைச் செயல்படுத்துவதற்காக பணிக் குழுவும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியர் தலைமையில் அமைக்கப்பட்டது. இச்சட்டம் முறையாகச் செயல்படுத்தப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.

மேலும் இந்தச் சட்டம் கடுமையாக நடைமுறைப்படுத்தப்படுகிறது என்பதைக் கண்காணிக்க ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு அமைச்சகம் பல்வேறு உத்தரவுகளை அவ்வப்போது பிறப்பித்து வருகிறது.

2015 ஆம் ஆண்டு சிறுவர்கள் பாதுகாப்பு மற்றும் அரவணைப்பு நீதிமுறைச் சட்டம் இயற்றப்பட்டது. சிறுவர்களை முறையாக அரவணைக்கவும் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் அவர்களுக்குத் தேவையான சிகிச்சையை அளிக்கவும் பல்வேறு சூழ்நிலைகளில் சமுதாய ஒருங்கிணைப்புப் பணிகளில் ஈடுபடவும் நட்பு ரீதியான அணுகுமுறையை மேற்கொள்ளவும் இந்தச் சட்டம் வழிவகை செய்கிறது.

எந்தெந்த தொழில்கள் அபாயகரமானவை என்பதை நிர்ணயிக்கவும் சிறுவர்கள் தொழிலாளர் முறையைத் தடுக்கவும் ஒழுங்குபடுத்தவும் கடந்த 1986 ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட சட்டம் வழிவகை செய்கிறது

அபாயகரமான தொழில்களில் சிறுவர்கள் பணி அமைக்கப்படுவதைத் தடுக்கவும் இந்த சட்டம் வகை செய்கிறது. பீடி சுற்றும் தொழில் மற்றும் புகையிலை பதப்படுத்தும் தொழில் ஆகியவை இந்தப் பட்டியலில் அடங்கும்

பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் மாற்று வேலையில் ஈடுபடுவதற்குத் தேவையான திறன் மேம்பாட்டுப் பயிற்சியை ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகமும் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகமும் ஒருங்கிணைந்து அளித்து வருகின்றன.

பீடி சுற்றும் தொழிலில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் தேவையான மருத்துவ சிகிச்சை வசதிகளை அளிக்க ஒன்றிய அரசின் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அமைச்சகம் வழிவகை செய்துள்ளது.

இதற்காக நாடு முழுவதும் 225 மருத்துவ சிகிச்சை மையங்களும் 10 மருத்துவமனைகளும் செயல்பட்டு வருகின்றன. மேலும் இந்த தொழிலாளர்கள் புற்றுநோய், காச நோய், இதய நோய், சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை, புற்றுநோய், அடி வயிறு இறக்கம், வயிற்றுப்புண், பிற வயிறு சேர்க்கை, மகளிர் தொடர்பான நோய்கள், சிறுநீரக விதைப்பை பாதிப்பு போன்ற கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தால் அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்ற பின்பு அதற்கான செலவினங்களைத் திரும்பப் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

******